

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 309 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 04 – திங்கள்கிழமை 19 ஜூன் 2023 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 309 : Thiruvalluvar Year - 2054 - Aani 04 - Monday 19 June 2023 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## சாதனை மேல் சாதனை செய்து

# தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு நிமிர்ந்து நிற்கிறது !

## நிதிநுட்ப நகர அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.06.2023) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் சென்னை, நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் சென்னை, ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கத்தில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுமார் 56 ஏக்கர் நிலப்பரப்பில், நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், அங்கு முதற்கட்டமாக 254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5.6 லட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) என்ற அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நிதி, மின்சாரம் மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், செயல் இயக்குநர் டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூன் 19-**

**“சாதனை மேல் சாதனை செய்து தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு நிமிர்ந்து நிற்கிறது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிதிநுட்ப நகர அடிக்கல் நாட்டு விழாவில் பெருமிதத்துடன் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (17.06.2023) சென்னை, நந்தம்பாக்கத்தில், 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிதிநுட்ப நகரம் (FinTech City) அமைப்பதற்கும், 254 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்திலான நிதிநுட்ப கோபுரம் (FinTech Tower) கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு:-

கடந்த இரண்டு ஆண்டுகளாக அரசு எடுத்த பல்வேறு முன்னெடுப்புகளின் காரணமாக தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது.

இந்தியாவுக்கே முன்மாதிரியான மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு வளர்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, தொழில்துறையானது மிக வேகமான முன்னேற்றங்களை உருவாக்கித் தந்து வருகிறது.

முன்பு நம்முடைய தங்கம் தென்னரசு அவர்கள் தொழில் துறை அமைச்சராகச் செயல்பட்டார். அவரது வழித்தடத்தில் இப்போது டி.ஆர்.பி.ராஜா அவர்கள், தொழில் துறை அமைச்சராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

**சாதனை மேல் சாதனை!**

தமிழ்நாடு அரசின் தொழில் துறை நிகழ்ச்சிகள் என்பவை, நமது மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் நிகழ்ச்சிகளாக அமைந்திருக்கின்றன. தொழில் துறையில், சாதனை மேல் சாதனைகளை நாம் செய்து வருகிறோம். முதலீடுகளை ஈர்ப்பதற்கு எடுத்து வைத்திடும் ஒவ்வொரு அடியும், வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் ஒரு பெரிய இலட்சியத்தினைக் கொண்டதாக இருக்கின்றது. அனைவரையும் உள்ளடக்கிய நமது திராவிட மாடல் வளர்ச்சி, பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

நமது கடுமையான முயற்சி, உலகளாவிய நிறுவனங்களது கவனங்களை வெகுவாக ஈர்த்திருக்கிற காரணத்தால் தொழில் நிறுவனங்கள்தங்கள்முதலீடுகளை மேற்கொள்ள தமிழ்நாட்டை நோக்கி வந்த வண்ணம் இருக்கின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள இளைஞர்களும், பெண்களும் அவர்களது வசிப்பிடத்திற்கு அருகிலேயே பணிபுரிய ஏதுவாக, பரவலாக, மாநிலம் முழுவதும் இம்முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**ஆன்லைன் விற்பனைகள் அதிகரிப்பு!**

நிதிநுட்பத்துறைக்கான மின்னணுமயமாக்கப்பட்ட நிதிச்சேவைகள் அனைத்தும் ஏழை எளிய மக்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும். ஆன்லைன் விற்பனைகள் இன்னும் பலமடங்கு அதிகரித்திருக்கிறது.

‘கோவிட்’ பெருந்தொற்றுக் காலத்தில் அதிகரிக்கத் தொடங்கிய மின்னணுமயமாக்கப்பட்ட வங்கிச் சேவைகளின் பயன்பாடு, தற்போது பன்மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த வளர்ச்சியை நன்கு பயன்படுத்திக்கொண்டு நாமும் வளர்ந்திடவேண்டியது அவசியம் என்பதை அரசின் கடமையாக நான் கருதுகிறேன்.

தற்போதுள்ள சூழ்நிலையில், ATMஇல் பணம் எடுப்பதைவிட, கைபேசி மூலமாக பணப்பரிவர்த்தனைகள் மேற்கொள்வது அதிகமாக உள்ளது. வங்கிகள் ஏறக்குறைய முழு டிஜிட்டல் வங்கிகளாக மாறி விட்டனவோ என்ற அளவிற்கு, தற்போது டிஜிட்டல் பணபரிவர்த்தனைகள் அதிகரித்து வருகின்றன. முற்றிலுமாக எல்லா இடங்களுக்கும் எல்லாத் தரப்பினரையும் இது இன்னும் சென்றடையவில்லை என்று சொன்னாலும், எதிர்காலத்தைக் கருதி, அதற்கு ஏற்ப நமது திட்டமிடுதல்கள் இருக்க வேண்டும்.

**நிதி நுட்பத்துறை மிகப்பெரிய வளர்ச்சி!**

தற்போது அதிவேகமாக வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், மின்னணுவியல், புத்தாக்கம் மற்றும் புத்தொழில் நிறுவனங்களும் தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியைப்


தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


### இளைஞர்களின் சக்தி இங்கு கொட்டிக் கிடக்கிறது!

**படித்த திறன்மிகு இளைஞர்களின் சக்தி இங்கு கொட்டிக் கிடக்கிறது. பல வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டை நோக்கி வருவதற்கு இதுவும் ஒரு முக்கியக் காரணமாக அமைந்திருக்கிறது. இதனை நாம் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். அடுத்த கட்டத்திற்கும் எடுத்துச் செல்லவேண்டும்.**

**நாளை வரப்போகும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, நமது இளைஞர்களின் திறன்களை வளர்த்து, முன்னேறுவதில் நாங்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம். அதன் ஒரு பகுதியாகத்தான், ‘நான் முதல்வன்’ திட்டத்தை தொடங்கி இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறோம்.**

## பொதுத்துறை நிறுவனங்களை

# மோடி அரசு சீரழித்துவிட்டது!

### மல்லிகார்ஜுன கார்கே கண்டனம்!



புதுடெல்லி, ஜூன் 19-

நாட்டில் லட்சக் கணக்கான அரசு வேலைகளை பறித்து பொதுத்துறை நிறுவனங்களை மோடி அரசு சீரழித்து வருவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் பொருளாதாரத்துக்கு பொதுத்துறை நிறுவனங்கள் வகிக்கும் முக்கிய பங்கு குறித்து மோடி அரசு அறிந்து கொள்ளவில்லை என்று சாடியுள்ளார்.

3 லட்சத்து 84 ஆயிரம் அரசு வேலைகளை பறித்து 7 பொதுத்துறை நிறுவனங்களை மோடி அரசு சீரழித்து விட்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒன்றிய அரசு பணியிடங்களில் பெண்களுக்கான வேலை வாய்ப்பு 42 சதவிகிதமாக குறைந்தது ஏன் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். பொதுத்துறை நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையிலான பணியிடங்கள் 88 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதற்கான காரணங்கள் என்ன என்றும் அவர் வினவியுள்ளார்.

மேக் இன் இந்தியா திட்டத்தை மிகப்பெரும் திட்டமாக ஒரு பிம்பத்தை உருவாக்கி காண்பித்தார்களே தவிர, அத்திட்டத்தால் நாட்டுக்கு கிடைத்த பயன் என்ன என்று மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

வேலைவாய்ப்பு வழங்கும் பொதுத்துறை நிறுவனங்களை, வேலைவாய்ப்பை பறிக்கும் கருவியாக பிரதமர் மோடி பயன்படுத்தி வருவதாக கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.

## நேரு நினைவு அருங்காட்சியகத்தின் பெயரை மாற்றுவதா?

# அற்பத்தனம் என்றால் அதன் பெயர் மோடி!

### காங்கிரஸ் கடும் விமர்சனம்!

புதுடெல்லி, ஜூன் 19–

டெல்லியில் உள்ள நேரு நினைவு அருங்காட்சியகம் மற்றும் நூலகத்தின் பெயரை பிரதமர்களின் அருங்காட்சியகம் என ஒன்றிய அரசு பெயரை மாற்றியதற்கு மல்லிகார்ஜுன கார்கே கண்டனம் தெரிவித்துள்ளார்.

சொந்தமாக வரலாறு இல்லாதவர்கள் அடுத்தவர்களின் வரலாறை அழிக்க முயற்சி செய்கிறார்கள் என்றும் அவர் சாடியுள்ளார்.

அருங்காட்சியகத்தின் பெயரை மாற்றுவதால் நேருவின் புகழ் குறைந்துவிடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், அற்பத்தனம் மற்றும் பழிவாங்கும் செயல் என்றால் அதன் பெயர் மோடி என்று விமர்சித்துள்ளார்.

சிறுமையைச் சுமந்து திரியும் சிறிய மனிதர் மோடி என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

### கன்னியாகுமரியில் கடல் நீர்மட்டம் “திடீர்” தாழ்வு!

கன்னியாகுமரி, ஜூன் 19-

கன்னியாகுமரியில் ஒரு புறம் கடல் சீற்றமாகவும், கொந்தளிப்பாகவும் காணப்படுகிறது. இன்னொரு புறம் கடல் உள்வாங்கி காணப்படுகிறது.

இதனால் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள வங்க கடல் பகுதி நீர் மட்டம் தாழ்ந்து காணப்பட்டது. அதே வேளையில் இந்திய பெருங்கடல் மற்றும் அரபிக் கடல் பகுதியில் கடல் கொந்தளிப்புடனும் சீற்றமாகவும் காணப்பட்டது.

இதனால் விவேகானந்தர் நினைவு மண்டபத்துக்கு நேற்று முன்தினம் காலை 8 மணிக்கு தொடங்க வேண்டிய படகு போக்குவரத்து தொடங்கப்படவில்லை.

# தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

### வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூன் 19 -

தமிழ்நாட்டில் 16 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

தெற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்தது.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் நேற்று இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்தது.

சென்னை, வேலூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை, திருப்பத்தூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், கள்ளக்குறிச்சி, கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்தது.

இன்று (19.06.2023): தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

திருவள்ளூர், இராணிப்பேட்டை, காஞ்சிபுரம், சென்னை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

20.06.2023 மற்றும் 21.06.2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி முதல் 40 டிகிரி செல்சியஸ் அளவில் இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் (Heat Stress ) காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.

**சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:**

அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது / மிதமான மழை பெய்யக் கூடும். அதிகபட்ச வெப்பநிலை 38.39 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28.29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 38.39 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28.29 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும்.

இவ்வாறு வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.